அகத்தியர்

Agathiyan Production House

2009

பொருளடக்கம்

அகத்தியப் பெருமானின் துதி.....5
போற்றி.....5
அகத்திய பெருமானின் மகத்துவம்.....5
வாழ்த்தொலி.....9
சரணம்.....10
அகத்தியர் வரலாறு.....11

அகத்தியப் பெருமானின் துதி

குணங்குடி மஸ்தான் சாகிப் அருளிச் செய்த அகத்தீசன் சதகம்

தேவரீர் திருவடிக்கு ஆளாகவும் அட்டமா சித்தி தந்து அருள் புரியவும்
சித்தர்கணம் எல்லாம் எனக்கு அருள் இரங்கவும் சித்தம் வைத்து அருள் புரியவும்
பாவி அடியேன் செய்த பாவங்களெல்லாம் பறந்தோட அருள் புரியவும்
பக்குவம் அறிந்து எனைப் பக்குவ விசேடனாய்ப் பண்ணி வைத்து அருள் புரியவும்

நாவிட்டு உரைக்க ஒணாச் சோதி நயனத்தூடு நடனமிட அருள் புரியவும்
நம்பினேன் ஐயனே நட்டாற்றில் என் கைகள் நழுவிடாது அருள் புரியவும்
மாவேகமாக மெய்த் தவராஜ சிங்கமே வரவேண்டும் என்றன் அருகே
மாகுணங்குடி வாழும் என் அகத்தீசனே மவுன தேசிக நாதனே

போற்றி

புலத்தியர் அருளிச் செய்தப் அருட்கவிகள்

ஐயனே போற்றி
அருள்பெற்ற தேவே போற்றி
எமய்யனே போற்றி
மெய்சுடர் அணிந்தாய் போற்றி
கையனே போற்றி
காசினி முனிவா போற்றி உய்யனே எனையாட் கொண்ட உந்தியில் உதிக்குந் தேவே
ஒருபொருள் உகந்தாய் போற்றி
சிந்தையில் நினைந்த போதே திருநடமிட்டாய் போற்றி
வந்தித்தேன் உந்தன் பாதம் வானமுந் திறந்தாய் போற்றி
அந்தித்தேன் குருவே ஐயா நின் அடியினைப் போற்றி போற்றி

அகத்திய பெருமானின் மகத்துவம்

கொங்கணர் அருளிச் செய்த அருட்கவிகள்

அகத்திய மாரிஷி நமா என்றென்றோது
அஷ்ட சித்துதனை ஈவார் குளிகை ஈவார்
அகத்தியரே காஷாய வேட மீவார்
அப்போது சித்தரெல்லாம் கைக் கொள்வார்கள்

அகத்தியரைத் தெண்டனிட்டு மேரு செல்ல
யாருக்குந் தடையில்லை அரசேயென்பார்
அகத்தியர் தாம் எக்கியத்தில் பிறந்த யோகி
ஆயிரத்தெட்டு அண்டமெல்லாம் ஆணையாச்சே

கொங்கணர் அருளிச் செய்த அருட்கவிகள்

தான் என்ற கொடும்பாவம் தீர்க்கும் ஆசான்
தர்மத்தின் வழிசொல்லிக் கருணை வைப்பான்
ஊன் என்ற மந்திரமே உபதேசித்து
உண்மையுடன் சுழிமுனையிலே இருக்கும் என்று

கோன் என்ற சிவரூபம் கண்ணில் காட்டி
கோபமென்ற முனைபோக்கி ஆசை போக்கி
தான் என்ற ஆணவங்கள் தன்னைப் போக்கி
நாடுவார் குருநாதன் மோட்சந் தானே

தனிப்பாடல்

நெஞ்சார நினைப்பவர்க்கு நிழல் ஆவானை
நீங்காதார் குலம் தழைக்க நிதியாவானைச்
செஞ்சாலி வயற் பொழில் சூழ் தில்லை மூதூர்ச்
சிலம்பொலி போல் பாடுகின்ற சித்தன் தன்னை

வெஞ்சாபமுமில்லை ஒருவினையுமில்லை
வேலுண்டு துணை வருங்கால் வெற்றியுண்டாம்
அஞ்சாதீர் என்று யுக யுகத்தும் தோன்றும்
அகத்தியனை அருட்குருவை அகத்துள் வைப்பாம்

திருமூலர் அருளிச் செய்த அருட்கவிகள்

காலனையும் கைக்குள்ளே அடக்கிக்கொண்டு
கருணை என்ற கடல் தனிலே ஆட்சி செய்து
ஞாலமதில் ஞானத்தை காத்து நின்று
ஞானிகளை ஆக்கி நின்ற ஞானத்தேவே

தேவே நின் திருவடிகள் *மூலன்* இப்போ
தெரிவிப்பேன் குருமுனியின் ஆசியோடு
கூவிடுவேன் தலைவா நின் அடியைப்போற்றி
குருமுனியே திருமுனியே அறிந்தவர்க்கு

அறிந்தவர்க்கு அறக்கடலாய் விளங்குவாரே
அருள் என்றால் அகத்தியன் தான் வணங்கு வோர்க்கு
குறிப்பறிந்து குறை நீக்கும் குருவே கும்பன்
குந்தகத்தை உடைத்தெறியும் அருளே கும்பன்

கும்பனருள் நிகர் சொல்ல எவருமில்லை
குகனும் சிவன் தனக்கு நிகர் அருளைத் தந்தார்
எம்மறையும் அவர் உரைத்தால் பின்தான் சொல்வோம்
எழு என்றால் நாங்கள் எல்லாம் கரத்தைக் கட்டி

கட்டி நின்று கால் பற்றி ஆசி கேட்போம்
கடாட்ச மென்றால் அவர் ஈந்தால் உண்டு என்போம்
சட்டிசுட வேண்டுமென்றால் கும்பனைக் கேள்
சாகாவரம் வேண்டுமென்றால் கும்பனைக் கேள்

கும்பனைக் கேள் குடும்பமுடன் ஞானம் சொல்வார்
கோடிலக்கம் வேண்டுமா கும்பனைக் கேள்
எம்மானும் கும்பனே எல்லோர்க்கும் தான்
எங்களுக்கு வாசி தந்த வாசி கும்பன்

கும்பன் தான் ஔடதமும் நவக்கோளும் தான்
கும்பன் தான் குவலயமே வேறு ஏது
கும்பன் என்றால் ஆயிரத்தெட்டு அண்டமெல்லாம்
குறுகி நின்று நடுநடுங்கும் பராக்கிரமங்கள்

பராக்கிரமம் இகபரமும் சொல்வார் கும்பன்
பாடிட்டால் மாற்றம் சொல்ல எவனும் இல்லை
பராக்கிரமம் வாளையைப் போல் அளிப்பார் கும்பன்
பட்டமரம் துளிர்க்குமடா கும்பன் சொன்னால்

கும்பன் சொன்னால் குளவிகூட குதிரையாகும்
குருமுனிக்கு கிரியாயும் கடுகாய் நிற்கும்
கும்பனையே வணங்கியோர்க்கு குறைகளண்டா
குறையில்லா காப்பாக இருப்பார் என்றும்

புலிப்பாணி அருளிச் செய்த அருட்கவிகள்

ஆசியதும் கூறுகின்ற என் குரு நாதா
அடிபணிந்து *புலிப்பாணி* உரைப் பேனிப்போ
பாசமுடன் அகத்தியனின் அருளை வேண்டி
பகலிரவாய் நாமத்தை செபித்துக் கொண்டு

செபித்து திரிகின்ற மக்கள் நீங்கள்
சிறப்புடன் இப்புவியில் வாழ்வீரப்பா

தப்பில்லா கலியுகத்தில் உயர்ந்து வாழ்வீர்
தவமுனி அகத்தியனை நினைத்துவிட்டால்

நினைத்தாலே ஈரேழு சென்ம பாவம்
நீங்கிடுமே என்றுமே *போகர்* சொன்னார்
நினைவு கொண்ட முனிவரெல்லாம் தவமிருந்து
நானிலத்தில் தவம் செய்து அகத்தியம் கண்டார்

அகத்தியத்தை கண்டதொரு முனிவரெல்லாம்
அகிலத்தில் ரிஷிகளாய் வாழ்வார் இன்று
செகத்திலே மாந்தர்கள் அகத்தியத்தை
சிறப்புடன் பூசித்தால் தேவராவார்

தேவராவார் என்றுமே *வள்ளுவர்* சொன்னார்
தெரிந்திட்ட மாந்தர்கள் பூசை செய்து
பலவினைகள் நீங்கியே பல்லாண்டு வாழ்ந்தார்
பாருலகில் பலசிறப்பு அகத்திய நாமம்

அகத்திய நாமமதும் செபித்து நின்றால்
அகிலத்தில் வினையில்லா சேய் பிறக்கும்
புகழுடன் *சிவவாக்கியர்* கூறி நின்றார்
பல்லாயிரம் ஆண்டு காலம் வாழ்வதற்கு

வாழ்வதற்கு அகத்திய நாமம் பெருமருந்தாகும்
விளக்கமுடன் கூறினார் *ஔவையார்* தானும்
தாழ்வில்லா அகத்தியரை வணங்கி நின்றால்
தரணியிலே மரணமில்லா வாழ்வார் என்று

என்றுமே கூறி நின்றார் *பாம்பாட்டி சித்தர்*
இப்படியே சித்தர்கள் முனிவர்களெல்லாம்
நான்கு யுகங்களாய் அகத்தியர் மகிமை
நல்லதை கூறியே யுகம் போற்ற வாழ்ந்தார்

போற்றிடவே மும்மூர்த்தி தேவர்களும்
புனிதமுள்ள சித்தர்களும் ரிஷிகளெல்லாம்
குற்றமில்லா கணபதியும் முருகனோடு
கண்டதொரு தேவதைகள் கணங்களோடு

கணங்களுடன் பூதங்கள் நவக்கோள்கள்
குவலயத்தில் காண்பதொரு நிறங்களெல்லாம்
மணம் வீசும் நறுமணங்கள் திசைகள் பத்தும்
முழுமையும் இவ்வுலகம் அகத்தியம் என்று

என்றுமே கூறிட்டார் *மச்சமுனி* நூ லும்
இவ்வளவு அற்புதங்கள் ஒன்றென்றால் அகத்திய நாமம்
என்றென்றும் நாமத்தை செபித்து விட்டால்
செபித்தோர் முதல் இலட்ச மக்கள் பலனடைவார்

அடைந்திடும் நாமத்தை உலகோர்கெழுதி
அறிய செய்வோர் அகத்தியருக்கு சேயுமாவார்
எடுத்துரைக்க இதுகாலம் போராதப்பா
இதுக்கொரு விதியுண்டு சித்தர் கேட்க

சித்தர்கட்கு எடுத்துரைப்போம் அறிவீர்கள் நீங்கள்
சிவபெருமான் பார்வதியும் மகிழ்ந்துமிப்போ
ஒதிடவே *புலிப்பாணி* ஓடிவந்தேன்
உலகில் நீங்கள் உயர் செல்வ நிதிகளோடு

நிதிகளுடன் அதிர்ஷ்டங்கள் பெற்றுவாழ
நிதி தெய்வம் இலக்குமியை வணங்கியாசி
ஒதிடவே உயர் ஞானம் கல்வி காண
உலகிலே சரஸ்வதியை வணங்கி ஆசி

ஆசியதுவுடன் பார்வதியை போற்றுகிறேன்
அருள் பொருள் இன்பமதும் நிறைவு காண
பாசமுடன் தினங்காத்து நல்வழி காட்ட
பரமசிவன் அருள்முனிவர் அகத்தியர் போற்றி

போற்றியே வணங்குகின்றேன் *புலிப்பாணி* யிப்போ
புவிதனிலே அகத்தியத்தை வணங்கிவிட்டால்
நிறைவுபெற்ற மரணமில்லா வாழ்வடைவீர்
நினைத்த வண்ணம் நிதி செல்வம் குன்றா வாழ்வு

வாழ்வதனில் உலகமுள்ள காலம் மட்டும்
வாழ்ந்திடும் உங்கள் குடி செழித்து நன்றாய்
அழகுபட ஆனந்தமாய் வாழ்வீர் என்றும்

வாழ்த்தொலி

யாகோபு தண்டகம் 108

வேதமென்ற நபிமார்க்கு வாழி வாழி
விவேகமுள்ள நாதாக்கள் பாதம் வாழி
போதமுள்ள பொதிகைவளர் தட்சிணாயன்
புனிதமுள்ள அகத்தீசர் பாதம் வாழி

சரணம்

புலத்தியர் அருளிச் செய்த அருட்கவிகள்

குருவடி பொற்றாள் சரண் சரணம்
கும்பமுனியே சரண் சரணம்
திருவடி நாதா சரண் சரணம்
சித்தர்களின் அருளே சரண் சரணம்
அருள் வடிவானாய் சரண் சரணம்
அமரர்கள் கோவே சரண் சரணம்
பொருளடி மூலங் காட்டிற்று போதித்த குருவே சரண் சரணம்
பொதிகைவளர் அம்பலர் சரண் சரணம்
வேதித்தெனையே ஆட்கொண்ட விமலா சரண் சரணம்
மெய்ஞ் ஞானம் சாதித்த தேவே சரண் சரணம்
சமுசயந் தீர்த்தாய் சரண் சரணம்
ஒதித்தருள்வாய் சரண் சரணம்
உண்மை பொருளே சரண் சரணம்
(அகத்தீசனே சரண் சரணம்)

அகத்தியர் வரலாறு

ஒரு கல்பத்தில் ஏழு மனுக்களின் ஆதிக்கத்தின் கீழ் ஏழு கண்டங்கள் ஒன்றின் பின் ஒன்றாக தோன்றி மறையும். மூன்றாவது கண்டமாகிய குமரிக் கண்டம் தோன்றியபோது, அதன் பாதுகாவலராக அகத்தியர் இறைவனால் அனுப்பிவைக்கப்பெற்றார். அக்த்தியர் பொதிகை மலையில் தங்கி முருகனிடம் ஐந்திரமான எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பும் (அகத்தியம்), இயல், இசை, நாடகம் (முத்தமிழ்) ஓதியுணர்ந்தார்.

அகத்தியர் சப்த மகாரிஷிகளில் ஒருவராவர். இவர் பிரம்மாவின் மானஸபுத்திரர். அகத்தியர் ஐந்தொழில் ஆற்றல் பெற்ற அட்டமாசித்தரான விஞ்ஞான கலராவர்.

இவர் இவ்வுலகின் திருச்சிற்றம்பலத்து அந்தரங்க அருள் அரசாட்சியில் பிரம்மாவின் பிரதிநிதியாக வேதாகமங்களின் கர்மகாண்டப்பகுதியை மேற்பார்வையிட்டு வருகின்றார்.

கர்மகாண்டத்தின் அங்கங்களாகிய இலக்கணம், இலக்கியம், சோதிடம், வான சாத்திரம், வைத்தியம், வாகடம், இரசாயணம், இரசவாதம், பௌதிகம், சிற்பம், சித்திரம், இசை, கணிதம் முதலிய விஞ்ஞானங்கட்கு மூலகர்தாவாவர்.

கிரியாசத்தியுடன் கூடிய பிரம்மாவின் பிரதிநிதியாக அகத்தியர் அருளரசில் உலகில் நடைபெறும் கலாச்சாரத்திற்கும் யக்ஞமாதி கிரியைகளுக்கும் அகமங்கட்கு பொறுப்பாளியாக இருக்கின்றார். சநாதன தர்மத்தை கண்காணித்து வருகின்றார்.

தமது சங்கல்ப எண்ண அலைகளால் பக்குவம் பெற்று தகுதிவாய்ந்த விஞ்ஞானி முதலான ஆராய்சியாளர்களுக்கு உள்ளுணர்வாக நின்று ஊக்குவிக்கின்றார்.

மற்றும் மக்களின் பாவபுண்ணியங்களையும் கணிக்கின்றார். இதற்கு சித்திராகுப்தர்கள் என்ற கர்மதேவதைகள் இவரது ஏவலின் கீழிருந்து உதவுகின்றன. இவர் அகத்தியம், சோதிடம், வைத்தியம், ஞானம் முதலிய சித்தர் நூல்களையும் இயற்றியுள்ளார். மற்றும் சிதம்பரத்தில் வாழ்ந்த சிவாலயமுனிவரின் வேண்டு கோட்கிணங்க **796** பதிகங்கள் கொண்ட தேவார அடங்கன் முறையை தினந்தோறும் எளிதில் பாராயணம் பண்ணத்தக்கதாக அவற்றில் **25** பதிகங்களை தேர்ந்தெடுத்து அவற்றை தொகுத்து அகத்தியர் தேவாரத்திரட்டு என்ற பெயருடன் வெளியிட்டருளினார்.
அகத்தியர் பொதியமலையிலிருந்து இமயம் வரை யாத்திரை செய்து ஆங்காங்கே ஆச்சிரமங்களை அமைத்தார்.

பொதிகையிலே எனைப்பார்க்கச் சிவனும் வந்தார்
பூரணனே தெய்வமென்று போற்றிச் செய்து
இதமாகக் கற்பமுறை யாவும் கேட்டேன்

-அகத்தியர் கற்பமுப்பூ குறுநூல் 100, 42

ஆரப்பா வென்றுசொல்லிச் சிவனும் வந்தார்
அப்போது அகத்தியனா ரென்று சொன்னேன்
பேரப்பா தெட்சணா மூர்த்தி யென்று
பேரும்வைத்துப்பிரபலமாய்ப் பேருண்டாச்சே

பேர்கொடுத்து மெய்ஞ்ஞானம் திறந்து சொன்னர்
பெருஞானம் பாடுதற்கு அருளுந்தந்தார்
ஆர்கொடுத்தார் சிவனுமையு மெனக்கு தந்தார்
ஐயருட கடாட்சத்தாலே அருளும் பெற்றேன்

-அகத்தியர் கற்ப தீட்சை,52

ஆச்சப்பா இருபத்து அஞ்சு சித்தி
ஆச்சென்று தட்சணாமூர்த்தி தானும்
பேச்சப்பா என்னுடனே நால்வருக்கும்
பேரான ஆதியிலே உபதேசித்தார்

-அகத்தியர் தத்தவம் 300, 13

அகத்தியர் மார்கழி மாதம் ஆயில்ய நட்சத்திரம் மூன்றாம் பாதத்தில் பிறந்ததாக போகர் கூறுகின்றார். போகர் அகத்தியருடைய வயதை உலகில் எவராலும் சொல்ல முடியாதென்றும் நான்கு யுகம் கடந்தவர் என்றும் கூறுகின்றார்.

விஞ்ஞான கலராகிய அகத்தியர் இரண்டு மகாயுகங்களை கண்டவர்.[1]

கொங்கணர் நீர்தத்துவம் தொடங்கி அனைத்து ஜீவராசிகளும் தோன்றி பத்துப்பதினைந்து இராவணன் இராமன் இப்படி தோன்றி தோன்றி மறையக் கண்டேன் என்றும், அதேபோல கிருஷ்ணன் தோன்றி 18 பாரதமும் முடிவதைக் கண்டேன் என்றும் எத்தனையோ திருமால், பிரும்மா மாண்டு போன கூத்தையெல்லாம் கண்டேன் நானே என்கிறார்.

அகத்தியர் வசிட்ட முனிவரிடமும், பதஞ்சலி முனிவரிடமும் தீட்சை பெற்று, முருகனிடமும் ஈசனிடமும் ஞானோபதேசம் பெற்றார்.

2040 ஆண்டுகட்குமுன் அகத்தியர் பாண்டிய மன்னன் வேண்டுகோட்கிணங்க சென்னை மைலாபூரில் திருவள்ளுவராக அவதரித்தார். பின் 1823வடலூரில் திருவருட்பிரகாச வள்ளலார் எனம் சிதம்பரம் இராமலிங்க சவாமிகள் என்ற திருநாமத்துடன் அவதரித்தார்.

[1] கர்மசித்தி, யோகசித்தி, ஞானசித்திகளால் சுத்ததேகம், பிரணவதேகம், ஞானதேகம் பெற்ற சுவர்ணதேகிகளது ஆயுள் 4,32,000 ஆண்டு முதல் 12,02,850 கோடி வருடங்களாம் என்று திரு அருட்பாவில் அருளப்பெற்றுள்ளது.

தவயோகி தங்கராசன் அடிகள்

- அண்டமும் பிண்டமும், ஸ்ரீ அகத்தியர் ஞான பீடம், கல்லாறு, 2007

பொன் கோவிந்தசுவாமி

- திருச்சிற்றம்பலம் என்ற சிற்சபையும் பொற்சபையும் அவனியின் அந்கரங்க அருள் அரசு-சிதம்பர ரகசியம், பாரத் புக் பீரோ, சென்னை,1970
- வள்ளலாரும் பிரம்மஞான சங்கமும்-பாரத் புக் பீரோ, சென்னை,1970

பா கமலக்கண்ணன்

- சித்தர் நூல்களில் அகத்தியர் திருவள்ளுவர் வரலாறு

R.Manickavasagam,

- Contribution of Agathiyar to Siddha System of Medicine Heritage of the Tamils - Siddha Medicine, International Institute of Tamil Studies, Chennai,1983

Agathiyan Production House
2009